பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் (நிருவாகம்) – கிழக்கு மாகாணம்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් කාර්යාලය (පරිපාලන) - නැගෙනහිර පළාත
OFFICE OF THE DEPUTY CHIEF SECRETARY (ADMINISTRATION) - EASTERN PROVINCE

எனது இல. / මගේ අංකය. / My No. EP/02/CMA/16 | உமது இல. / ඔබේ අංකය. / Your No. | திகதி. / දිනය. / Date. 2014.06.26

**கிழக்கு மாகாண பொது நிருவாக சுற்றிக்கை இல: DCS(A)/04/2014**

சகல செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத்தலைவர்கள்,
நிறுவனத் தலைவர்கள்.

**கிழக்கு மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் அமுலாக்கம்**

கிழக்கு மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர்களுக்கான புதிய ஆட்சேர்ப்புத் திட்டமானது கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதிக்கப்பட்டு 2013.04.02ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**02. உள்ளீர்ப்பு**

குறித்துரைக்கப்பட்ட திகதியிலுள்ளவாறு மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III, II, I மற்றும் அதிஉயர் வகுப்பிற்குச் சொந்தமான பதவிகளில் சேவையாற்றிக்கொண்டிருக்கும் சகல அலுவலர்களும் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் **15**ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பின்வரும் விதத்தில் புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் உள்ளீர்க்கப்படல் வேண்டும்.

அலுவலர்கள் தற்போது பெற்றுக்கொள்ளும் சம்பளம் மற்றும் சம்பள ஏற்றத்திகதி என்பன இவ் உள்ளீர்ப்புக் காரணமாக மாற்றப்படலாகாது.

(அ) குறித்துரைக்கப்பட்ட திகதியிலுள்ளவாறு மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III இலுள்ள அலுவலர்கள் புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தரம் III இற்கு உள்ளீர்க்கப்படல் வேண்டும்.

(ஆ) குறித்துரைக்கப்பட்ட திகதியிலுள்ளவாறு மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு II இலுள்ள அலுவலர்கள் புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தரம் II இற்கு உள்ளீர்க்கப்படல் வேண்டும்.

(இ) குறித்துரைக்கப்பட்ட திகதியிலுள்ளவாறு மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு I இலுள்ள அலுவலர்கள் புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தரம் I இற்கு உள்ளீர்க்கப்படல் வேண்டும்.

**03. பதவியுயர்வுகள்**

இவ் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் **12** ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட பதவி உயர்வுத் திட்டம் மற்றும் **10** ஆம் பிரிவில் குறிப்படப்பட்ட வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகள் என்பன 2013.04.02ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும். எனினும் **17** ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட இடைக்கால சலுகை ஏற்பாடுகளுக்கு அவைகள் உரித்துடையவையாகும். (இவ் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் இணைப்பு 01 மற்றும் 02 இற்கு அமைய பதவியுயர்வுகளுக்கான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்)

**04. வேறு**

(அ) இவ் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் **11** ஆம் பிரிவில் விதித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய ஒவ்வொரு அலுவலரும் மொழித்தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அதற்கிணங்க, அத்தகைய அலுவலர்களால் மொழித்தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பில் 2007.06.01ஆம் திகதியிலிருந்து மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்களுக்கு 7/2007 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையிலும் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளிலும் உள்ள ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படல் வேண்டும்.

*கலாமதி பத்மராஜா*
பிரதிப் பிரதம செயலாளர்- நிருவாகம்

கன்னியா வீதி, வரோதய நகர், திருகோணமலை.
කන්නියා පාර, වරෝදය නගර, ත්‍රිකුණාමලය.
Kanniya Road, Varothaya Nagar, Trincomalee.

Gen. Office I : 026 2224049
Gen. Office II : 026 2222114
Admin Officer : 026 3269885
Deputy Chief Secretaty : 026 2222703
Assistant Chief Secretaty I : 026 3269883
Assistant Chief Secretaty II : 026 2222593
Fax : 026 2227161
Web :www.ep.gov.lk
E-mail : admin@ep.gov.lk

6890